**பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை–28 அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை: டாக்டர். இரா.செல்வராஜ்., இ.ஆ.ப.,**

**ந.க.எண். 4464/2020/அ6** **நாள்: 07.02.2022**

பொருள்: கருணை அடிப்படையில் பணிநியமனம் – பேரூராட்சிகள் நிர்வாகம் – சிவகங்கை மண்டலம் – சிவகங்கை மாவட்டம் – மானாமதுரை பேரூராட்சியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து – 30.01.2018–இல் பணியிடை காலமான நாகூர்பிச்சை(திரு).ச – என்பவரின் வாரிசுதாரரும் மகனுமாகிய ஆஸிக்உமர் (திரு)நா. – என்பவரை கருணை அடிப்படையில் மானாமதுரை பேரூராட்சியில் வரித்தண்டலராக பணிநியமனம் செய்யப்பட்டது – 16.08.2018 முற்பகல் முதல் வரித்தண்டலராக பணியில் சேர்ந்தது – பணி வரன்முறை செய்தல் – தொடர்பாக.

பார்வை:
1. சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.665/2018/டி2இ நாள்.10.08.2018.
2. சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவரின் கடித ந.க.எண். 665/2018/டி2 நாள்.23.03.2020.
3. இவ்வியக்கக கடிதம் ந.க.எண்.4464/2020/அ6, நாள்.08.07.2020
4. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(கியூ) துறை, நாள்.26.02.2021.
5. அரசு கடித எண்.9807/பேரூ.1/2020–1, நாள்.22.11.2021

******

**ஆணை:**

சிவகங்கை மண்டலம், சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பேரூராட்சியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து 30.01.2018–ல் பணியிடை காலஞ்சென்ற திரு.ச.நாகூர்பிச்சை என்பவரின் வாரிசுதாரரும் மகனுமாகிய திரு.நா.ஆஸிக்உமர் என்பவருக்கு பார்வை 1–ன் படி கருணை அடிப்படையில் மானாமதுரை பேரூராட்சியில் வரித்தண்டலராக பணிநியமனம் வழங்கப்பட்டு 16.08.2018 முற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளார்.

அதன் தொடர்ச்சியாக பார்வை 2–ல் காணும் கடிதத்தில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட தனியரது பணியினை வரன்முறை செய்ய வரப்பெற்ற கருத்துருவினை பார்வை 3–ல் காணும் இவ்வியக்கக கடிதம் மூலம் அரசுக்கு அனுப்பி

வைக்கப்பட்டது. பார்வை 5–ல் காணும் அரசு கடிதத்தில் அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(கியூ) துறை, நாள்.26.02.2021–ல் வெளியிடப்பட்ட வழிமுறைகளின் படி நியமன அலுவலருக்கு ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற **பேரூராட்சிகளின் ஆணையர்** நிலையிலேயே இந்நேர்வில் பணிவரன்முறை செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பேரூராட்சியில் வரித்தண்டலராக பணிபுரிந்து வரும் திரு.நா.ஆஸிக்உமர் என்பவரது பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான கலம் 5–ல் காணும் நாள் முதல் பணிவரன்முறைப்படுத்தி ஆணையிடப்படுகிறது.

| வ.எ | பணியாளர் பெயர்/ பணியின் நிலை | பணிபுரியும் பேரூராட்சி | பணியில் சேர்ந்த நாள் | பணியினை வரன்முறைப்படுத்திய நாள் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | திரு.நா.ஆஸிக்உமர் வரித்தண்டலர் | மானாமதுரை பேரூராட்சி | 16.08.2018 மு.ப | 16.08.2018 மு.ப |

மேலும் தனியரின் பணிப்பதிவேட்டில் இப்பொருள் தொடர்பாக உரிய பதிவுகளை மேற்கொள்ளவும், பதிவுகள் மேற்கொள்ளப்பட்டமைக்கான பதிவேட்டின் நகலினை அனுப்பிடவும் சிவகங்கை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

பேரூராட்சிகளின் ஆணையர் (2/5)

வாங்கி 07/02/2022

__பெறுநர்:__
திரு.ந.ஆஸிக்உமர்,
வரித்தண்டலர்,
மானாமதுரை பேரூராட்சி.
(சிவகங்கை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் வாயிலாக)

__நகல்:__
1. மாவட்ட ஆட்சித்தலைவர், சிவகங்கை மாவட்டம்
2. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், சிவகங்கை மஎ
3. செயல் அலுவலர், மானாமதுரை பேரூராட்சி
4. அ6 இருப்புப் கோப்பு

Executive Officer
Selection Grade Town Panchayat
Sithayankottai - 624 708.
Dindigul Dist.